# TNPSC – Group II
# இந்திய அரசியலமைப்பு

**6ம் வகுப்பு**

1.சமுதாயம் என்பது என்ன? பல சமூகங்கள் ஒன்று சேர்ந்து வாழ்வது

2.சமூகம் என்பது என்ன?

இன்பம்,துன்பம் ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு சேர்ந்து வாழும் மக்கள் குழு

3.சமூகத்தின் நாடித்துடிப்புகள் யாவை? இன்பம்,துன்பம் மற்றும் கௌரவம்

4.சமுதாயத்தின் உயிர்மூச்சு எனப்படுபவை எவை? ஒற்றுமை,கடமை,உரிமை,பங்கேற்பு,பாதுகாப்பு,வளர்ச்சி

5.எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்,எல்லாரும் இந்திய மக்கள்,எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,எல்லாரும் இந்நாட்டு மன்னர்- ஆம் எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று பாடியவர் யார்?

பாரதியார்

6.சமுதாயம் உருவாதல் பற்றிய சரியான வரிசை : தனிநபர்-குடும்பம்-சமூகம்-சமுதாயம்

7.வெள்ளை நிறத்தொரு பூனை- எங்கள் வீட்டில் வளருது கண்டீர், ... எந்த நிறமிருந்தாலும் அவை யாவும் ஒருதர மன்றோ? இந்த நிறம்சிறி தென்றும் - இ∴து ஏற்றமென் றுஞ்சொல்ல லாமோ? –இது யார் பாடியது? பாரதியார்

8.சமுதாயத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் அடிப்படை முதலீடு : கல்வி

9.தமிழகத்தில் மாநகராட்சிகள் எத்தனை?

சென்னை,மதுரை,கோவை,திருச்சி,சேலம்,நெல்லை,ஈரோடு,திருப்பூர்,வேலூர் மற்றும் தூத்துக்குடி-10

10.மாவட்ட ஆட்சியரகங்களில் மக்கள் குறைதீர்க்கும் நாள் எந்த நாளில் நடைமுறையில் உள்ளது?

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை

11.நமது நாட்டில் உள்ள ஆட்சி முறை : குடியரசு ஆட்சி முறை

12.மக்கள் தொடர்புத் திட்டம் என்பது என்ன?

கிராம நருவாக அலுவலர் முதல் மாவட்ட ஆட்சியர் வரை மாதத்தில் ஒரு நாள் தொலைதூரக் கிராமம் ஒன்றில் கலந்து கொள்ளும் நிகழ்வு

13.உள்ளாட்சி அமைப்பு முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்தியவர் யார்? ரிப்பன் பிரபு

14.ஊர் மன்றக் கூட்டங்கள் நடைபெறும் நாட்கள் யாவை?

ஜனவரி26 – குடியரசுத்தினம் , மே1 தொழிலாளர் நாள்,ஆகஸ்ட் 15 விடுதலை நாள்,அக்டோபர்2 – மகாத்மா காந்தி பிறந்த நாள்

15.எவ்வளவு மக்களுக்கு ஒரு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கபபடுகிறார்?

50,000 மக்கள்

16.மாவட்டத்திட்டக்குழு தலைவர் யார்? மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர்

17.மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்கள் யார்?

சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள்

18.பேரூராட்சி எவ்வளவு மக்கள் தொகையை உள்ளடக்கியது? 10,000

நகராட்சி-1,00,000 மாநகராட்சி – பல இலட்சம்

19.பின் வரும் அமைப்புகளின் தலைவர்கள் யார்?

பேரூராட்சி – பேரூராட்சித்தலைவர் , நகராட்சி- நகராட்சித்தலைவர் ,மாநகராட்சி- மேயர்

20. பின் வரும் அமைப்புகளின் நிருவாக அலுவலர்கள் யார்?

பேரூராட்சி – செயல் அலுவலர் , நகராட்சி- நகராட்சி ஆணையர் ,மாநகராட்சி- ஆணையர்

21.உள்ளாட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு? 5 ஆண்டுகள்

22.ஊராட்சி மன்றத்தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்? மக்களால் நேரடியாகத்

23.ஊராட்சியின் வருவாய் ஆதாரங்கள் யாவை?

வீட்டு வரி,தொழில் வரி,கடைகள் மீது விதிக்கப்படும் வரி,குடிநீர்க்குழாய் இணைப்புக்கட்டணம்,நில வரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட பங்கு, சொத்துரிமை மாற்றத்தின் மீதான வரியிலிருந்து ஒரு பங்கு,மத்திய மாநில அரசுகளின் திட்டநிதி மற்றும் மானியங்கள்

24.ஊராட்சி ஒன்றியம் என்பது என்ன?

பல ஊராட்சிகள் ஒன்றிணைக்கப்பட்டு அமைக்கப்படுவது

25.மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பாடியவர் : தேசியகவி பாரதியார்

26.டாக்டர் முத்துலஷ்மி ரெட்டி பிறந்த நாள் எது?

1886 ஜூலை30- புதுக்கோட்டை மாவட்டம்

27.டாக்டர் பட்டம் பெற்ற முதல் இந்திய பெண்மணி : டாக்டர்.முத்துலஷ்மி ரெட்டி

28.1930 ல் அடையாற்றில் ஔவை இல்லம் தொடங்கியவர் யார்?

டாக்டர்.முத்துலஷ்மி ரெட்டி(கைவிடப்பட்ட விதவைப்பெண்களின் காப்பகமே ஔவை இல்லம்)

29.டாக்டர்.முத்துலஷ்மி ரெட்டிக்கு மத்திய அரசுக்கு 1956ல் வழங்கிய விருது எது? பத்மபூஷன்

30.அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தொடங்கியவர் யார்? டாக்டர்.முத்துலஷ்மி ரெட்டி

**7ம் வகுப்பு**

1.தொழில் துறையில் இந்தியாவின் இடம் - **10 ம் இடம்**

2.விண்வெளியில் இந்தியாவின் இடம் - **6ம் இடம்**

3.இந்தியாவை சிறிய உலகம் என்று அழைக்கப்படக் காரணம்-

மாறுபட்ட புவியியல் அமைப்பு,தட்பவெப்பநிலை,தாவரங்கள்,விலங்குகள்,பலவகைப்பட்ட கலாச்சாரம்,பழக்க வழக்கங்கள்,மொழிகள்,நம்பிக்கைகள்

4. நில அளவு அடிப்படையில் இந்தியாவின் இடம் - **7ம் இடம்(32,87,263 ச.கி.மீ)**

5.மக்கள் தொகை அடிப்படையில் இந்தியாவின் இடம்- **2 ம் இடம் ( முதலிடம் சீனா)**

6.இந்தியாவின் இருப்பிடம்- வடக்கே இமயமலை,தெற்கே இந்தியப்பெருங்கடல்,கிழக்கே வங்காள விரிகுடா,மேற்கே அரபிக் கடல்)

7.இந்தியாவின் மொத்த நில எல்லையின் நீளம் - **15200 கி.மீ**

8.இந்தியாவின் கடற்கரை **-7516.6 கி.மீ** நீளம் உடையது

9.இந்தியாவின் அமைவிடம் - வட அரைக்கோளம் ( $8^0 4'$ முதல் $37^0 6'$ வட அட்சம்- $68^0 7'$ முதல் $97^0 25'$ வரை)

10.வடக்குத் தெற்காக இந்தியாவின் நீளம்-3214 கி.மீ மற்றும் கிழக்கு மேற்காக-2933 கி.மீ

11. 2001 ன் படி இந்தியாவின் மக்கள் தொகை- **1028 மில்லியன்**

12. 2001 ன்படி ஆண்கள் -532.1 மில்லியன் - பெண்கள் 496.4 மில்லியன்

13. 2001 ன்படி மக்கள் தொகை அடர்த்தி – **324/ச.கி.மீ**

14. 2001 ன் படி கல்விஅறிவு பெற்றோர் விகிதம்- **64.8%(** ஆண்கள்-75.26 – பெண்கள் 53.67)

15. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு – **இந்தியா**

16.இந்தியா ஒரு இறையாண்மையுடைய, சமதர்ம, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசு நாடு

17. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது – **சனவரி 26-1950**

18.இந்திய அரசியலமைப்பின் சிறப்பு - உலகின் மிக நீண்ட எழுதப்பட்ட அரசியலமைப்பு

19.இந்தியக் குடியரசில் உள்ள மாநிலங்கள்- **28 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்**

20.மத்திய அரசின் நிர்வாகத்தில் அடங்குபவர்கள் - குடியரசுத்தலைவர்,துணைக்குடியரசுத்தலைவர்,பிரதம அமைச்சர், மத்திய அமைச்சர்கள் குழு மற்றும் அட்டார்னி ஜெனரல்

21.இந்திய நாட்டின் தலைவர்- **குடியரசுத்தலைவர்**(இவரே முதன்மைக் குடிமகன்)

22.யார் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும்- 35 **வயது** நிறைவடைந்தோர்

23.துணைக்குடியரசுத்தலைவர் பதவியின் முக்கியத்துவம்-

குடியரசுத்தலைவர் பதவி நிரப்படாமலிருக்கும் நேரத்திலும் , தனது பணியைச் செய்ய இயலாத நேரத்திலும் குடியரசுத்தலைவர் பணியை துணைக்குடியரசுத்தலைவர் ஆற்றுவார்

24.இந்திய அரசியலமைப்பின் பெயரளவிலான தலைவர்- **குடியரசுத்தலைவர்** ( உண்மைத்தலைவர்-பிரதமர்)

25.குடியரசுத்தலைவர் யாரை பிரதமராக நியமனம் செய்கிறார்- தேர்தலில் வெற்றிபெற்ற பெரும்பான்மை உறுப்பினர்களைக கொண்ட கட்சித்தலைவரையும் மக்களவையின் நம்பிக்கையை பெற்றவருமான ஒருவரை

26.அமைச்சர்களை யார் நியமிக்கிறார்? பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத்தலைவர்

27.மத்திய சட்டமன்றம் என்பது எது- **பாராளுமன்றம் அல்லது நாடாளுமன்றம்**

28.பாராளுமன்றம் எதனை உள்ளடக்கியது- **குடியரசுத்தலைவர் மற்றும் இரு அவைகள்**

29.பாராளுமன்றத்தின் இரு அவைகள் - **மக்களவை(லோக்சபா) மற்றும் மாநிலஙளங்களவை(ராஜ்யசபா**)

30.லோக் சபாவின் உறுப்பினர்கள்- வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

31.தற்போது மக்களவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை – 545(543 + 2 (**நியமனம்**))

32.ராஜ்யசபா உறுப்பினர்கள் **மறைமுகமாக** தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

33.ராஜ்ய சபா உறுப்பினர்களின் எண்ணிக்கை- 238 + 12 **(நியமனம்)**

34.ராஜ்யசபாவில் நியமன உறுப்பினர்கள் எத்துறைகளிலிருந்து குடியரசுத்தவைர் நியமிக்கிறார்-

**கலை,இலக்கியம்,அறிவியல்,சமூகப்பணி**

35.மாநில அரசின் நிர்வாகத்தில் அடங்குபவர்கள் : ஆளுநர்,முதலமைச்சர்,அமைச்சர்கள்குழு மற்றும் அட்வகேட் ஜெனரல்

36.ஆளுநர் **குடியரசுத்தலைவரால்** 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமிக்கப்படுகிறார்

37.ஆளுநராக நியமிக்கப்பட தேவையான வயது – 35 **வயது** நிறைவு

38.ஆளுநர் யாரை முதலமைச்சராக நியமிக்கிறார்- தேர்தலில் வெற்றி பெற்ற பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்ட கட்சித்தலைவரும் சட்டமன்றத்தின் நம்பிக்கையைப்பெற்ற ஒருவரை

39.மாநில அமைச்சர்களை யார் நியமிக்கிறார்- முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர்

40.ஈரவை கொண்ட மாநிலங்கள் - **ஆந்திரப்பிரதேசம்,பீகார்,ஜம்மு- காஷ்மீர்,கர்நாடகம்,மகாராஷ்டிரம் மற்றும் உத்திரப்பிரதேசம்**

41. இந்திய நீதிமன்றங்களில் தலைமையானது- **உச்ச நீதிமன்றம்**

42.இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பாதுகாவலன் - **உச்ச நீதி மன்றம்**

43.உச்ச நீதிமன்றத்தின் அமைவிடம் - **புது டெல்லி**

44.இந்திய உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை- 30+1 **நீதிபதிகள்**

45.மாநிலத்தின் தலைமை நீதிமன்றம் - **உயர் நீதிமன்றம்**

46.இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்களின் எண்ணிக்ணை- 21

47.நமது தேசியக்கொடியில் உள்ள கொடியின் நீள அகல விகிதம் : 3:2

48.நமது தேசியக் கொடி : **மூவர்ணக் கொடி**

49. தேசியக் கொடியின் மூன்று நிறங்களின் வரிசை- மேற்பகுதியில் காவிநிறமும் நடுவில் வெண்மை நிறமும் கீழே கரும்பச்சை நிறமும் நடுவில் வெண்மை நிறமும் கொண்டுள்ளது.

50. மூன்று நிறங்கள் உணர்த்துபவை- காவி நிறம் தியாகத்தையும் தைரியத்தையும் வெண்மை நிறம் உண்மையையும் பச்சை நிறம் செழுமையையும் குறிக்கிறது.
51.தேசியக் கொடி எப்போது அங்கிகரிக்கப்பட்டது-**ஜூலை 22** -1947
52.நமது தேசியக் கொடி முதன்முறையாக எப்போது ஏற்றப்பட்டது-1947 **ஆகஸ்ட்**15
53.இந்திய நாட்டு தேசிய கீதத்தை இயற்றியவர்- **இரவீந்திரநாத் தாகூர்**
54.தேசிய கீதம் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது- 1950 **சனவரி**24
55.நமது தேசியகீதம் எப்போது முதன்முதலாக பாடப்பட்டது-1911 **டிசம்பர்27-கல்கத்தா காங்கிரஸ் மாநாடு**
56.தேசியகீதம் பாட எடுத்துக்கொள்ளப்படும் நேரம்-- **52 விநாடிகள்**
57.நமது தேசிய சின்னம் - அசோகரின் சாரநாத் தூணில் உள்ள சிங்கங்களின் உருவம்
58.நமது தேசிய சின்னம் ஏற்றுக்கொள்ளப்பட்டது- **ஜனவரி26,1950**
59.நமது தேசிய சின்னத்தில் உள்ள விலங்குகள் - 4 சிங்கங்கள்(அதிகாரம்(ம) கம்பீரம்),குதிரை(ஆற்றல் மற்றும் வேகம்),காளை (கடின உழைப்பு மற்றும் உறுதி)
60.நமது தேசிய சின்னத்தில் தேவநாகரி மொழியில் உள்ள சத்யமேவஜெயதே என்னும் வார்த்தையின் பொருள் : **வாய்மையே வெல்லும்**
61.நமது நாட்டின் தேசிய விலங்கு – **புலி** (இதற்கு முன்பு சிங்கம்)
62.நமது நாட்டின் தேசிய விலங்கு உணர்த்தும் பண்புகள் : **வலிமை,திறமை மற்றும் மிகுந்த ஆற்றல**
63.நமது நாட்டின் தேசியபறவை- மயில் ( இதன் இறகுகள் நமது நாட்டின் இயற்கை அழகைப்பிரதிபலிக்கிறது)
64.தேசிய மலர்- **தாமரை** ( இதன் இதழ்கள் ஒன்றுசேர்ந்திருப்பது நமது நாட்டின் ஒற்றுமையைக் குறிக்கிறது)
65.தேசியப்பழம்- மா, தேசிய விளையாட்டு - **ஹாக்கி** ,தேிய ஆறு – **கங்கை**
தேசிய நாட்காட்டி – **சக ஆண்டு நாட்காட்டி**, தேசிய மரம் - **ஆல மரம்**

66. அரசியல் அமைப்பு நிர்ணய சபை எதன் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
அமைச்சரவை தூதுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்
67.அரசியலமைப்பு நிர்ணயசபை முதல் கூட்டம் எப்போது யார் தலைமையில் அமைந்தது
**1946 டிசம்பர் 9ல் டாக்டர்.சச்சிதானந்தா சின்கா**
68.அரசியலமைப்பு நிர்ணய சபையின் நிரந்தரத்தலைவர்- **டாக்டர்.ராஜேந்திர பிரசாத்** (இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவரும் இவரே)
69.அரசியலமைப்பு நிர்ணயசபை சட்டமியற்றும் பணியை யாருக்கு வழங்கியது_ **வரைவுக்குழு**
70.வரைவுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டவர்- **டாக்டர் .பி.ஆர்.அம்பேத்கார்(1947 ஆகஸ்ட் 29)**
71.அரசியலமைப்பு நிர்ணய சபை கடைசியாக கூடியது-**ஜனவரி24,1950**
72.அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் : **26 சனவரி 1950( இந்த நாளே குடியரசு தினம்**)
73.அரசியலமைப்பு வரைவுக்குழுவில் இடம் பெற்றிருந்தோர்- என்.கோபாலசுவாமி ஐயங்கார்,அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்,டாக்டர்.கே.எம்.முன்ஷி,சையத் முகமது சாதுல்லா,பி.எல்.மிட்டர்,என்.மாதவராவ்,டி.டி.கிருஷ்ணமாச்சாரி,டி.பி.கைத்தான்
74.அரசியலமைப்பு நிர்ணய சபை எவ்வளவு நாட்கள் செயல்பட்டது- **2வருடம் 11மாதம்-18 நாட்கள்**
75.இந்திய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டது- 1929 ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்தியத் தேயகாங்கிரஸ் மாநாட்டுத்தீர்மானத்தின் படி 1930 **ஜனவரி 26ம்** நாள் பூரிண சுயராஜ்யம் கொண்டாடப்பட்டதை நினைவு கூறும் வகையில்
76.இந்திய அரசியலமைப்புச்சட்டத்தில் உள்ள பிரிவுகள்-**22 பாகம் 12 அட்டவணை 449 ஷரத்துகள்**
77.முகப்புரை அதிகாரத்தின் தோற்றுவாய் என யாரைக் குறிப்பிடுகிறது_ **மக்களை**

78.பாராளுமன்ற அரசமுறை அழைக்கப்படும் முறை- பொறுப்பு அரசு அல்லது காபினெட் அரசு

79. அடிப்படை உரிமைகள் எத்தனை வகைப்படும் ? **6 வகைகள்**

சுமத்துவ உரிமை,சுதந்திர உரிமை, சுரண்டலுக்கெதிரான உரிமை,மதச்சுதந்திர உரிமை,பண்பாட்டு மற்றும் கல்வி உரிமை,அரசியலமைப்பின் படி தீர்வு காணும் உரிமை

80.அரசு நெறிமுறைக்கோட்பாட்களின் தேவை என்ன?

எந்த ஒரு சட்டத்தை இயற்றும்போதும் அரசு கண்டிப்பாக இதனை கடைபிடிக்கவேண்டும்.

81.அரசு நெறிமுறைக்கோட்பாடுகளின் 4 வகைகள்:

1.சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள் 2.காந்தியக் கோட்பாடுகள் 3 .பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள் 4.பல்வகையான நெறிக்கோட்பாடுகள்

82.சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகளில் அடங்குபவை?

ஆண்,பெண் வேலைக்கு சம ஊதியம் வழங்குதல்,வருவாய் ஏற்றத்தாழ்வை குறைத்தல்

83.காந்தியக் கோட்பாடுகளில் அடங்குபவை?

தாழ்த்தப்பட்ட,மலைவாழ் மக்களை கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றுதல் ,கிராம பஞ்சாயத்துகளை உருவாக்குதல்,குடிசைத்தொழில்கள்

84.வயது வந்தோர் வாக்குரிமை யாருக்கு வழங்கப்படுகிறது?

சாதி,நிறம்,மதம்,பாலினம்,படித்தோர்,சொத்துடமை ஆகிய வேறுபாடுகளின்றி 18 வயது பூர்த்தி அடைந்து அனைவருக்கும்

85.இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள அடிப்படை கடமைகள் எத்தனை?

11 ( 11 வது அடிப்படை கடமை 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி பெற வாய்ப்பு ஏற்படுத்தி தருதல்)

86. மக்களாட்சி என்பது மக்களால்,மக்களுக்காக மக்களே நடத்தும் அரசு என்பது யார் கூற்று:

**ஆபிரகாம் லிங்கம்**

87.மக்களாட்சி முறை வெற்றியடைய உதவுபவை எவை:

**அரசியல் கட்சிகள்**

88.மக்களாட்சியில் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக இருப்பவை :

**அரசியல் கட்சிகள்**

89.கட்சி என்பதன் பொருள் :

மக்கள் ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு தேர்திலில் பங்கேற்று ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை பெறச்செய்யும் அமைப்பு

90.கட்சி முறையின் வகைகள் :

**ஒரு கட்சி முறை- (கம்யூனிச நாடு ரஷ்யா மற்றும் கியூபா)**

**இரு கட்சி முறை- ( அமெரிக்கா ,இங்கிலாந்து)**

**பலகட்சி முறை- (இந்தியா,பிரான்ஸ்,இத்தாலி மற்றும் இலங்கை)**

91.உலகில் அதிக எண்ணிக்கையுடைய கட்சிகள் காணப்படும் நாடு : **இந்தியா**

92.தேசியக்கட்சி என்பது எது?

குறைந்தது **4 மாநிலத்தில் மாநிலக்கட்சி** என்று ஒப்புதல் பெற்ற கட்சி

93.மக்களாட்சியின் முதுகெலும்பாக செயல்படுபவை- அரசியல் கட்சிகள்

94. மக்களாட்சியில் மக்கள் கருத்தை உருவாக்க துணைபுரிபவை-அரசியல் கட்சிகள்

95.முதல் உலகப்போர் நடைப்பெற்ற ஆண்டு – **1914-18**

96.இரண்டாம் உலகப்போர் நடைப்பெற்ற ஆண்டு- **1939-45**

97.முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட அமைப்பு - **பன்னாட்டுக்கழகம்**

98.ஐ.நா யாருடைய முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது- **பிராங்கிளின் டீ ரூஸ்வெல்ட்**

99.ஐ.நா அமைப்பிற்கு முன்னோடியாக இருந்த அட்லாண்டிக் சாசனம் கையெழுத்தான ஆண்டு **1942 ம் ஆண்டு சனவரி 1ம் தேதி** (26 நாடுகள் கையெழுத்திட்டன)

100.ஐ.நா சாசனத்தை எழுத கூட்டப்பட்ட மாநாடு எங்கு நடைப்பெற்றது? **சான்பிரான்ஸிஸ்கோ நகர் - 1945 ஏப்ரல் 25**

101.சான்பிரான்ஸிஸ்கோவில் எழுதப்பட்ட சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகள் எத்தனை? **50 நாடுகள்** ( ஜூன் 26ம் நாள் 1945ல் கையெழுத்திட்டனர்

102.ஐ.நா அவை செயல்படத்துவங்கிய நாள் : **1945 அக்டோபர் 24** ( இதுவே ஐ.நா தினம்)

103. ஐ.நா வில் உள்ள உறுப்பு நாடுகள் : **192 நாடுகள்**

104. ஐ.நா தலைமையகம் அமைந்துள்ள இடம் : **நியுயாரக்** (மன்ஹாட்டன பன்னாட்டு பகுதி)

105.ஐ.நா வின் பொதுமொழிகள் யாவை? **ஆங்கிலம்,பிரெஞ்ச்,ஸ்பானிஷ்,ருஷியன்,சீனமொழி(ம) அரேபியம்**

106.ஐ.நா அமைப்பின் 6 முக்கிய அமைப்புகள் யாவை?

**1.பொதுப்பேரவை 2.பாதுகாப்புப்பேரவை 3.பொருளாதார மற்றும் சமூகப்பேரவை 4.பன்னாட்டு நீதிமன்றம் 5.அறங்காவலர் பேரவை 6.பன்னாட்டு செயலகம்**

107.ஐ.நா மனித இனப்பாராளுமன்றம் எனப்படுவது **பொதுப்பேரவை**

108.பொதுப்பேரவையின் உறுப்பினர்கள் யார்?

ஐ.நா வின் அனைத்து உறுப்புநாடுகளின் பிரதிநிகள்(ஒவ்வொரு உறுப்பு நாடும் 5 பிரிதிநிதிகளை அனுப்பலாம்)

109.பொதுப்பேரவை எவ்வளவு காலத்திற்கொருமுறை கூடுகிறது? **ஆண்டிற்கொருமுறை**(பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில்)

110.பொதுப்பேரவையின் தலைவராக 1954ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் : **திருமதி.விஜயலஷ்மி பண்டிட்**

111.ஐ.நா வில் முக்கியத்தீர்மானங்களை நிறைவேற்ற தேவைப்படும் உறுப்பினர்கள் : **2/3ல் பங்கு**

112.பொதுச்செயலர் மற்றும் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வது யார்? **பொதுச்சபை** ( பாதுகாப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் )

113.ஐ.நா வின் ஆண்டு வரவு செலவு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது- **பொதுச்சபை**

114.பாதுகாப்பு பேரவையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை- **5 நிரந்தர உறுப்பினர்கள் + 10 நிரந்தரமற்ற உறுப்பினர்கள்** = 15 உறுப்பினர்கள்

115.பாதுகாப்பு பேரவையில் நிரந்தர உறுப்பினர்கள் யார்? **ருஷ்யா,பிரான்ஸ்,அமெரிக்கா,இங்கிலாந்து மற்றும் சீனா**

116. பாதுகாப்பு பேரவையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு? **2 ஆண்டுகள்** ( இவர்கள் பொதுப்பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுவர்)

117.பாதுகாப்பு பேரவையில் முடிவுகள் எடுக்க தேவைப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை? **2/3 பங்கு** ( நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு தடுப்பு உரிமை ஆணை(Veto power) உண்டு)

118. தடுப்பு உரிமை ஆணை(Veto power) என்பது என்ன?

இதனை பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்பு நாடு **எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாமல் தடுக்க இயலும்.**

119.2010ம் ஆண்டில் பாதுகாப்பு பேரவையின் நிரந்தமற்ற உறுப்பினராக 2 ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டது.

120.பொருளாதார மற்றும் சமூக பேரவையில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை-54

ஒவ்வொரு உறுப்பினரும் மூன்றாம் ஆண்டு பதவி விலகுவர்

121. பொருளாதார மற்றும் சமூக பேரவையிலன் கூட்டம் நடைபெறும் காலம்-

**ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம்** முக்கிய கூட்டம் நடைபெறும்

122.அறங்காவலர் பேரவையின் பணி

பேரவை மேற்பார்வை செய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது.1994 ஆண்டிற்குள் இந்நாடுகள் அனைத்தும் சுதந்திரம் பெற்றதால் இது தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

123.பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையிடம் உள்ள இடம் _ **திஹேக்(ஹாலந்து)**

124.பன்னாட்டு நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை-15

125.பன்னாட்டு நீதிபதிகள் யாரால் நியமிக்கப்படுகின்றனர்- **பொதுப்பேரவை மற்றும் பாதுகாப்புபேரவை**

126.ஐ.நா செயலகம் யாருடைய தலைமையில் இயங்குகிறது? **செயலர்**

127.ஐ.நா செயலர் யார்? **பான் கீ மூன்** ( தென்கொரியா-2007 ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்)

128.ஐ.நாவில் உள்ள சிறப்பு நிறுவனங்கள் எத்தனை? 30

129.ஐ.நா வின் சிறப்பு நிறுவனங்கள் யாவை?

**FAO – Food and Agricultural Organisation**(உலக உணவு மற்றும் வேளான் நிறுவனம்)

**ILO – International Labour Organisation**(பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம்)

**IMF- International Monetary Fund**(உலக நிதி நிறுவனம்)

**UNICEF- United Nations International & Children Emergency Fund**(ஐ.நா உலக நாடுகள் குழந்தைகள் நல நிதி)

**UNESCO- United Nations Educational Scientific and Cultural Organisation**(ஐ.நா கல்வி,அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம்)

**WHO-World Health Organisation** (உலக மக்கள் நல நிறுவனம்)

**WTO- World Trade Organisation**(உலகளாவிய வணிக நிறுவனம்)

130.ஐ.நா அவையின் சாதனைகள் யாவை?

1.1946 ல் ஈரானிலிருந்து ருஷ்யபடை திரும்ப பெறுதல்

2.1947 ல் டச்சு பிடியிலிருந்த இந்தோனிஷியாவிற்கு விடுதலை

3.1956 சூயஸ் கால்வாய் தேசியமயமாக்கல்

4.1962 மற்றும் 1973 மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சனை தீர்ப்பு

5.1988 ஈரான் ஈராக் போரை முடிவுக்கு கொண்டுவந்தது

6.1989ல் ஆப்கானிஸ்தானத்திலிருந்து ரஷ்யபடை திரும்பப்பெறுதல்

7.1990 ல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்றுத்தந்தது

131.உலக நல நிறுவனத்தின் சாதனை என்ன?

பெரியம்மை நோயை முற்றிலும் ஒழித்தது

132.அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் மேலாணையர் அலுவலகம்(UNHCR) 1954 மற்றும் 1981 ல் நோபல் பெறக் காரணம் என்ன?

**அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்காக**

133.இந்திய அரசியலமைப்பில் குழந்தைகளின் பாதுகாப்பையும் வளர்ச்சியைப்பற்றிக் கூறும் பிரிவுகள்

**ஷரத்து 39(f) மற்றும் 45**

134.குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை பற்றி கூறும் ஷரத்து- 24(14 வயதிற்குட்பட்ட எந்தக்குழந்தையும் ஆலைகளில் வேலை செய்யவும் சுரங்கங்கள் மற்றும் அபாயமான தொழில்கள் செய்வதையும் தடை செய்கிறது.

135.**ஷரத்து 39 f** சொல்வது என்ன? குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி,குழந்தைகள் மற்றும் இளையோர்மீது போதிய கவனத்துடன் செயல்படுதல்,சுரண்டலிலிருந்து பாதுகாத்தல்

136. **ஷரத்து 45** வழிவகுப்பது என்ன?

பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும இலவச கட்டாயக்கல்வி அளித்தல்

137.கல்வி உரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் : **2010 ஏப்ரல் 1** ( 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதே கல்வி உரிமைச்சட்டம் ))

138.குழந்தைகள் நலனுக்காக இந்திய அரசு நிறைவேற்றியுள்ள சட்டங்கள் யாவை?

1.**1986 இளம் குற்றவாளிகள் நீதிச்சட்டம்** ( 2000ல் திருத்தம்)

2.**பொறுப்பாணைக்குழு சட்டம்-2005** ( குழந்தைகள் உரிமைகளை பாதுகாக்க)

139.ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்(ICDS) கொண்டுவரப்பட்டது-**1975**

140.ராஜீவ் காந்தி குழந்தைகள் காப்பக திட்டம் -**2006**

141.குழந்தைகள் தினம் கடைபிடிக்கப்படும் நாள் : **நவம்பர் 14ம்நாள்**

142.முதன்மையான குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது-**1996(**4 முதல் 15 வயதிற்குரிய சிறப்புக்குரிய குழந்தைகள் )

143. **ஷரத்து 23** எதனைப்பற்றி கூறுகிறது?

பெண்களை வியாபார பொருளாக செயல்படுதை தடைசெய்கிறது

144.1978குழந்தைத்திருமணத்தடைச் சட்டதிருத்தத்தின்படி வயது வரம்பு என்ன?

**ஆண்களுக்கு**-21(18) **பெண்களுக்கு**-18(15)

145.வரதட்சனைத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது-)1961(**திருத்தம்** 1986

146.தமிழ்நாடு அரசு பெண்களை இகழ்தல்தடை சட்டம்(ஈவ் டீசிங்) இயற்றப்பட்டது – **1997**

திருத்தம் -2002

147. 73 மற்றும் 74 சட்டத்திருத்தங்கள் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கியுள்ள இடஒதுக்கீடு- 33%

148.வேலைக்கானப் பயிற்சித்திட்டம்(**STEP) 1996** எதற்காக ஆரம்பிக்கப்பட்டது?

கைவேலைப்பாடுகள்,கைத்தறிகள்,காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் பெண்களுக்கு பயிற்சி

149.குறுகிய கால இல்லங்கள்- 1996 எதற்காக ஏற்படுத்தப்பட்டது?

சமூக,பொருளாதார,மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளில் துன்பப்படுகின்ற பெண்களுக்கு ஆற்றுப்படுத்தும் இடமாக

150.ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் (**ICDS**) நோக்கம் என்ன?

குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்தல்

## 8ம் வகுப்பு

1.இந்தியா பல இனங்களின் அருங்காட்சியகம் என் அழைக்கப்படக்காரணம்-

பத மதங்களின் பிறப்பிடமாக இந்தியா இருப்பதால்

2.கலாச்சாரம் என்பது என்ன?

பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடு

3.இந்திய அரசியலமைப்பு அங்கிகரித்துள்ள மொழிகளின் எண்ணிக்கை-22

4.இந்தியாவின் தேசிய மொழி- தேவ நாகரி வடிவிலான இந்தி எழுத்து

5.இந்தியாவின் அலுவலக இணைப்பு மொழி- ஆங்கிலம்

6.காளிதாசரின் மேக தூதம் மற்றும் சாகுந்தலம் எம்மொழி நூல்?

சமஸ்கிருதம்( இராமாயணமும் சமஸ்கிருத நூலே)

7.கிறித்துவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள் : புனிதவெள்ளி,ஈஸ்டர் மற்றும் கிறிஸ்துமஸ்
8.முஸ்லீம்களால் கொண்டாடப்படும் விழாக்கள் : மிலாது நபி,பக்ரீத் மற்றும் ரமலான்
9.குருநானக் ஜெயந்தி கொண்டாடுவது- சீக்கியர்கள்,மகாவீரர் ஜெயந்தி-சமணர்
10.கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானி இசைப்பாணியின் பிறப்பிடம் - இந்தியா
11.தேசிய ஒருமைப்பாட்டுத்தினம் கொண்டாடப்படும் நாள் : நவம்பர்19
12.மொழி அடிப்படையில் இந்திய மாநிலங்கள் பிரிக்கப்பட்டது- 1956
13.வட்டார ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணிகள் : வறுமை,வேலையில்லாத்திண்டாட்டம்,குறைவான வாழ்க்கைத்தரம்,குறைவான தனிநபர் வருமானம்
14.இந்திய சமூக அமைப்பு எதனை அடிப்படையாகக் கொண்டது_ சாதி
15.நாட்டின் வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் காரணிகள் : எழுத்தறிவு அளவு மற்றும் கல்வி வளர்ச்சி
16.1948-1949 ம் ஆண்டு பல்கலைக்கழக மான்யக்குழுவின் பரிந்துரை
தாய்மொழி மூலம் கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும்
17.1968 ம் ஆண்டு கல்விக் கொள்கையின் தாக்கம் என்ன?
நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி(10+2+3) முறையை அறிமுகப்படுத்தியது
18.ஆரம்பக்கல்வியை கட்டாயமாக்கிய கல்விக்கொள்கை- 1986ம் ஆண்டு கல்விக் கொள்கை
19.1992 ம் ஆண்டு கல்விக்கொள்கை கரும்பலகைத்திட்டம் என்ன செய்தது?
பள்ளிகளுக்கு அடிப்படை வசதி செய்து தர வழிவகை செய்தது
20.1991 ம் ஆண்டு பேராசிரியர் தவே அவர்களின் குறைந்தபட்ச கற்றல் அளவு(MLL) சாதனை
ஆரம்பக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது
21.தேசிய எழுத்தறிவு குழு யாருக்கு முக்கியத்துவம் அளித்தது?
வயது வந்தோர் கல்விக்கு
22.சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் இலக்கு என்ன?
2010ம் ஆண்டிற்குள் அனைத்துக்குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி வழங்கப்படவேண்டும்
23.பன்னாட்டு எழுத்தறிவு ஆண்டாக ஐ.நா அறிவித்த ஆண்டு-1990
24.உலக எழுத்தறிவு தினம் கொண்டாடப்படும் நாள் : செப்டம்பர்8
25.1949 ம் ஆண்டு குழந்தைகள் பணி சட்டத்தின்படி குழந்தைகள் பணிபுரிய தேவையான வயது
17 ( இதற்கு முன்பு 14)
26.1952 ம் ஆண்டு தோட்டத்தொழிலாளர் சட்டத்தின்படி யாரை தோட்டத்தொழிலில் ஈடுபடுத்துவதை தடை செய்கிறது- 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளை
27.கொத்தடிமை ஒழிப்புசட்டம் 1976- கொண்டு வந்தது யார்? முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி
28.உடன் கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்ட ஆண்டு -1829
29.விதவை மறுமணச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1856
30.சாரதா சட்டம் 1929 இயற்றப்படக்காரணமாக இருந்தவர்- டாக்டர்.முத்துலஷ்மி ரெட்டி
31.சாரதா சட்டம் எதற்காக கொண்டுவரப்பட்டது- குழந்தை திருமணத்தை தடை செய்ய
32.1956 இந்து வாரிசுரிமை சட்டம் எதற்கு கொண்டுவரப்பட்டது-
பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கு சமபங்கு உண்டு எனக் கூறும் சட்டம்
33.வரதட்சனைக் கேட்பது தண்டனைக்குரிய குற்றம் எனக் கூறும் சட்டம்
1961 வரதட்சனை தடைச்சட்டம்
34.1976ம் சமஊதியச்சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கம்
சம பணிக்கு சம ஊதியம் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதே
35.பெண்குழந்தைகளை சிசுக்கொலையில் பாதுகாக்கும் சட்டம் - தொட்டில் குழந்தை சட்டம் 1992

36. ஐ.நா அறிவித்த உலக பெண்கள் ஆண்டு - 1978
37. வறுமை என்பதற்க உலக வங்கி வழங்கிய வரையறை-
குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இயலாத நிலை
38. முதலாவது ஐந்தாண்டுத்திட்டம்(1951-1956) எதற்கு முக்கியத்துவம் அளித்தது?
விவசாயத்திற்கு
39. நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின்(1969-1974) நோக்கம்-
மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல்
40. வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளித்த ஐந்தாண்டுத்திட்டம் -
ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம்(1974-1979)
41. ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தின்(1985-1990) இலக்கு என்ன?
உணவு உற்பத்தியில் சுயசார்புநிலை
42. மக்களின் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஐந்தாண்டுத்திட்டம்
10 வது ஐந்தாண்டுத்திட்டம்
43. ஜவஹர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் நோக்கம்
வேலையில்லாதோருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது
44. இந்திரா காந்தி அறிமுகப்படுத்திய 20 அம்ச திட்டத்தின் சாதனை என்ன?
வறுமையை ஒழித்து சமுதாயத்தின் அடித்தட்டு மக்களை பொருளாதாரத்திலும் சமுதாயத்ததிலும் உயர்த்தி சமூக நீதி கிடைக்க வழி செய்யப்பட்டது
45. வேலையில்லாத்திண்டாத்தின் முக்கிய காரணம் - மக்கள் தொகை பெருக்கம்
46. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின்(NREP)-1980 நோக்கம்
மக்களுக்கு அதிகபட்ச வேலைவாய்ப்பு கிடைக்க வழியேற்பட்டது
47. கிராமப்புற வேலைவாய்ப்பு உத்திரவாதத்திட்டம்( RLEGP)-1983 எதற்கு கொண்டுவரப்பட்டது
100 நாட்களுக்க நிலமற்ற குடும்பங்களில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்க வழிவகுத்தது
48. 1979ம் ஆண்டு கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டத்தின் நோக்கம்
கிராமப்புற இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி சுய வேலைவாய்ப்பிற்கு வழி வகுத்தது
49. 1989ம் ஜவஹர் ரோஜ்கார் யோஜ்னா(JRY) என்ற திட்டம் நோக்கம்
கிராமப்புற மக்களுக்கு கிராம பஞ்சாயத்தின் மூலம்
50. உலக நிலப்பரப்பளவில் இந்தியா பெற்றுள்ள சதவீதம் - 2.4%
51. உலக மக்கள் தொகையில் இந்தியாவின் சதவீதம் -16.84%
52. மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள் யாவை?
பிறப்பு விகிதம் அதிகமாகவும் இறப்பு விகிதம் குறைவாகவும் உள்ளதால்
53. உலக மக்கள் தொகை தினமாக கொண்டாடப்படும் நாள் : ஜூலை11
54. உரிமை பற்றி பேறிஞர் பொசாங்கோவின் கூற்று என்ன?
உரிமைகள் என்பன சமூகத்தால் அங்கிகரிக்கப்பட்டு அரசால் நடைமுறைப்படுத்தப்படுவதாகும்
55. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் நிறைவேற்றப்பட்ட நாள் : டிசம்பர்10,1948
56. ஐ.நா பிரகடனம் எத்தனை சரத்துகளைக் கொண்டது : 30
57. வியன்னா மனித உரிமை பிரகடனம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு : 1993
58. தேசிய மனித உரிமை ஆணையம் டெல்லியில் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு : 1993(அக்டோர் 12)
59. தேசிய மனித உரிமை ஆணையத்தில் உள்ள உறுப்பினர்கள் எத்தனை ?
ஒரு தலைவர் மற்றும 4 உறுப்பினர்கள்
60. தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருப்பவர் யார்?

ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

61.தேசிய மனித உரிமை ஆணைய உறுப்பினர்களின் தகுதிகள் யாவை?

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர்,உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர்,மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்க இருவர்

62.தேசிய மனிதஉரிமை ஆணைய உறுப்பினர் மற்றும் தலைவரை நியமனம் செய்வது யார்?

குடியரசுத்தலைவர்

63.தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைமையிடம் உள்ள இடம் : புது டெல்லி

64.தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை(மறு நியமனம் பெறத் தகுதி உடையவர்கள்)

65.தேசிய மனிதஉரிமை ஆணையத்தின் முக்கிய நோக்கம் என்ன?

மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் ஆகும்

66.மனித உரிமை மீறல்களில் இவ்வாணையம் எவ்வாறு தலையிடுகிறது?

பாதிக்கப்பட்டவர்கள் மனுசெய்தாலோ அல்லது தானாகவோ

67.தேசிய மனிதஉரிமை ஆணையத்தின் அதிகாரம் எதற்கு ஒப்பானது?

வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களும்

68. தேசிய மனித உரிமை ஆணையம் ஆண்டறிக்கையை யாருக்கு அனுப்புகிறது?

மத்திய அரசிற்கு

69.தமிழ்நாட்டில் மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டது எப்போது?

ஏப்ரல்17,1997

70.மாநில மனித உரிமை ஆணையத்தில் உள்ள உறுப்பினர்கள் எத்தனை பேர்?

ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள்

71.மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர்?

ஓய்வு பெற்ற உயர்நீமன்ற தலைமை நீதிபதி

72.மாநில மனிதஉரிமை ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுபவர்கள் ?

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதபதி ஒருவர்,ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர்,மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவம் மிக்க இருவர்

73.மாநில மனித உரிமை ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்ய ஆளுநருக்கு பரிந்துரை செய்யும் குழுவில் அடங்கியுள்ளோர் யாவர்?

முதலமைச்சர்,மாநில உள்துறை அமைச்சர், சட்ட மன்ற தலைவர் ,சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர்

74. மாநில மனித உரிமை ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை

75. மாவட்ட மனித உரிமை ஆணைய தலைவராக நியமிக்கப்படுவர் யார்?

மாவட்ட நீதிமன்றத்தில் 7 ஆண்டுகள் பணியாற்றியவர் அல்லது அரச வழக்கறிஞர்

76.இந்து விதவை மறுமணச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _ 1856

77.1955 ம் ஆண்டு இந்து திருமணச்சட்டப்படி பெண்களின் திருமண வயது _ 21

78.இந்து வாரிசுரிமைச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1956 ( பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை)

79.வரதட்சனை தடைச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1961

80.தமிழக அரசு சுயமரியாதை திருமணங்களை சட்டப்பூர்மாக்கிய ஆண்டு – 1967

81.தமிழக அரசு பெண்களை கேலி செய்வதை தடைசெய்ய சட்டம் இயற்றிய ஆண்டு – 1997

82.தமிழக அரசு பெண்களை அநாகரிக மாக சித்தரித்து சுவரொட்டிகள் ஒட்டுவதை

தடைசெய்த ஆண்டு-1999

83.தொழிற்கூட சட்டம் - 1948,தோட்டத் தொழிலாளர் சட்டம் - 1952 , சுரங்கச்சட்டம்- 1952
84.பெண்கள் மகப்பேறுகால சலுகைச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 11961
85. சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படும் நாள் : மார்ச் 8
86.பெய்ஜிங் பெண்கள் உரிமை மாநாடு நடைப்பெற்ற ஆண்டு – 1995
87.ஐ.நா சபை எந்த ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது_ 1978
88.குழந்தை தொழிலாளர் தடைசெய்வதைப்பற்றிய அரசியலமைப்பு ஷரத்து- ஷரத்து 24
89.ஷரத்து 45 என்ன கூறுகிறது ?
14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக்கல்வி
81.குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வழிசெய்யும் ஷரத்து- 39E
82.சிறுவர்களுக்கு எதிரான அநீதி சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1986
83.ஐ.நா சபை எந்த ஆண்டை சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்தது? 1979
84.சாலை போக்குவரத்து விதிகள் கொண்டுவரப்பட்ட ஆண்டு – 1989 ஜூலை1
85.சாலை பாதுகாப்புக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு – 1986

## 9ம் வகுப்பு - குடிமையியல்

1.மத்திய அரசின் சட்டமன்றம் -பாராளுமன்றம்
பாராளுமன்றம் மேல்சபை மற்றும் கீழ்சபை என இரு அவைகள் கொண்டது.
2.கீழ்சபை மக்களவை அல்லது லோக்சபா என அழைக்கப்படுகிறது.
மேல் சபை மாநிலஙங்களவை அல்லது ராஜ்ய சபா என அழைக்கப்படுகிறது.
3.மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை – 545(மாநிலஙங்களிலிருந்து 530,யூனியன் பிரதேசங்களிலிருந்து 13 உறுப்பினர்கள் மற்றும் குடியரசுத்தலைவரால் ஆங்கிலோ இந்திய சமூகத்திலிருந்து நியமிக்கப்படும் 2 உறுப்பினர்கள்)
4.மாநிலஙங்கவை உறுப்பினர்களின் எண்ணிக்கை – 250 (238 உறுப்பினர்கள் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் மற்றும் 12 உறுப்பினர்கள் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்).
5.மக்களவை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
6.நாட்டின் எப்பகுதியிலிருந்தும் மக்களவை தேர்தலில் வேட்பாளராக போட்டியிட முடியும்.
7.மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான தகுதிகள்:
அ.இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டும்.
ஆ.25 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்.
இ.மத்திய மாநில அரசுப்பணியில் சம்பளம் பெறுபவராக இருக்கக்கூடாது.
ஈ.மன வளர்ச்சி குறைந்தவர்களும் பெற்றக்கடனை திருப்பித்தர முடியாதவர்களும் போட்டியிட முடியாது.
8.மக்களவையின் பதவிக்காலம் : முதல் கூட்டத்தொடர் தொடங்கிய நாளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு செயல்படலாம்
9.குடியரசுத்தலைவர் மக்களைவளை எப்போது கலைக்கலாம்?
பிரதம மந்திரியின் பரிந்துரையின் அடிப்படையிலோ அல்லது எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையிலோ குடியரசுத்தலைவர் மக்களவையை கலைக்கலாம்.
10.மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை எதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.
மக்கள் தொகையின் அடிப்படையில்
11.வயது வந்தோர் வாக்குரிமை யாருக்கு வழஙகப்படுகிறது.
18 வயது பூர்த்திஅடைந்தோர் அனைவருக்கும்
12.நிதி மசோதாக்கள் எங்கு கொண்டுவர முடியும்?

மக்களவையில் மட்டுமே கொண்டுவரமுடியும்

13.அமைச்சர்கள் யாருக்கு பொறுப்பானவர்கள்?

அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் லோக்சபாவிற்கு பொறுப்பானவர்கள்/

14.மக்களவையின் தலைவர் யார்? சுபாநாயகர்

15.சபாநாயகர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

மக்களவை உறுப்பினர்கள் மூலம்

16.சபாநாயகர் இல்லாத நேரத்தில் மக்களவையை நடத்துவது யார்?

துணை சபாநாயகர்

17.தற்போதைய மக்களவை பெண் தலைவர் யார்? மீரா குமார்

18.மாநிலஙங்களவைக்கு 12 உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் எத்துறைகளிலிருந்து நியமனம் செய்கின்றார்?

கலை,இலக்கியம்,அறிவியல் மற்றும் சமூக சேவை

19.ராஜ்யசபா உறுப்பினராக தகுதிகள் யாவை?

அ.இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்

ஆ.30 வயது நிறைவுபெற்றவராக இருத்தல் வேண்டும்

இ.நாடாளுமன்ற தொகுதியில் வாக்களாராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஈ.மத்திய மாநில அரசு ஊழியராக இருத்தல் கூடாது.

உ.மக்களவை உறுப்பினராக இருத்தல் கூடாது.

ஊ.மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்றக்கடனை திருப்பித்தர இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

20.மாநிலஙங்களவையின் பதவிக்காலம் : நிரந்தரம்( இதனை கலைக்க முடியாது)

21.மாநிலஙங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் : 6 ஆண்டுகள்( ஆனால் இதில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டாண்டுக்குப்பிறகு ஓய்வு பெறுகின்றனர்.

22.மாநிலஙங்களவையின் தலைவர் யார்? குடியரசுத் துணைத்தலைவர்

23.குடியரசுத் துணைத்தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

மக்களவை மற்றும் மாநிலஙங்களவை உறுப்பினர்கள் மூலம்

24.தற்போதைய மாநிலஙங்களவைத் தலைவர்? ஹமீத் அன்சாரி

25. தற்போதைய மாநிலஙங்களவை துணைத்தலைவர் : கு.செரியன்

26.ராஜ்ய சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை எதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிகக்கப்படுகிறது?

அந்த மாநிலத்தின் மக்கள்தொகையை அடிப்படையாகக்கொண்டு

27.நாடாளுமன்றத்தின் இரு அவைகள் யாவை? மக்களவை மற்றும் மாநிலஙங்களவை

28.இந்திய நாடாளுமன்றம் எவ்வகையைச் சார்ந்தது? இரு அவை முறை

29.நாடாளுமன்றத்தின் முக்கியப்பணிகள் யாவை?

1.சட்டமியற்றல் 2.நாட்டின் நிதிநிலைமைக்கு முழு பொறுப்பு 3.மைய வரவு செலவு திட்டங்களை தாக்கல் செய்வது 4.வரி நிர்ணயம் செய்தல்

30.அமைச்சரவை எதுவரை பதவியில் நீடிக்கமுடியும்?

நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை

31.மைய நிர்வாகம் என்பது எதனை உள்ளடக்கியது?

` குடியரசுத்தலைவர்,பிரதமர் மற்றும் அமைச்சரவை

32.நாட்டின் நிருவாகத்தலைவர் யார்? குடியரசுத்தலைவர்

33.குடியரசுத்தலைவரின் நிருவாகப்பொறுப்புகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது?

பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம்

34.குடியரசுத்தலைவர் யாரை பிரதமராக நியமிக்கிறார்?

மக்களவையில் பெரும்பான்மை பெற்ற கட்சித்தலைவர் அல்லது கூட்டணிகட்சிகளின் தலைவரை பிரதமராக குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

35.மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் அனைத்தும் குடியரசுத்தலைவரிடமே அடங்கியுள்ளது எனக் கூறும் ஷரத்து எது? ஷரத்து 53

36.குடியரசுத்தலைவருக்கான தகுதிகள் யாவை?

அ.இந்தியக்குடிமகனாக இருத்தல் வேண்டும்.

ஆ.35 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும்

இ.லோக் சபைக்கு தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தகுதி இருத்தல் வேண்டும்

ஈ.மத்திய மாநில உள்ளாட்சி அமைப்புகளில் ஊதியம் பெறும் பதவி வகித்தல் கூடாது.

உ.நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநில சட்டமன்ற அவைகளிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது. அப்படி உறுப்பினராக இருந்தால் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்னர் விலகி விட வேண்டும்.

37.குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

தேர்வாளர் குழுவால் விகிதாச்சார பிரிதிநிதித்துவ முறையைப்பின்பற்றி ஒற்றை மாற்று வாக்கு முறையில்

38.தேர்வாளர் குழுவில் அடங்கியுள்ளோர் யார்?

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

39.குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் முடியமுன்னரே பதவியிலிருந்த நீக்கும் வழிமுறை என்ன?

குற்ற விசாரணனை மூலம் (சட்ட திருத்தம் - 61)

40.குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் - 5 ஆண்டுகள்

- 41.குடியரசுத்தலைவராக பதவி வகித்த ஒருவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதியுள்ளவரா?
  தகுதியுடையவரே

  42.குடியரசுத்தலைவர் பதவி விலக விரும்பினால் தனது ராஜினாமா கடிதத்தை யாரிடம் வழங்கவேண்டும்?

  துணைக்குடியரசுத்தவைர்

  43.மக்களவைத் தலைவருக்கு குடியரசுத்தலைவரின் ராஜினாமாவைப்பற்றி அறிவிப்பபது யார்?

  துணைக் குடியரசுத்தலைவர்

  44.பாராளுமன்றத்தில் அனைத்து மசோதாக்களும் எப்போது சட்டமாகும்?

  குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே.

  45.குடியரசுத்தலைவரின் நியமனங்கள் யாவை?

  1.பிரதமர் 2.பிரதமரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்கள் 3.உச்ச ,உயர்நீதிமன்ற அனைத்து நீதிபதிகள் 4.தேர்தல் ஆணையர்கள் 5.அட்டார்னி ஜெனரல் 6.தணிக்கை குழுத்தலைவர் 7.மத்தியப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும உறுப்பினர்கள்

  10.ராணுவப்படைத்தளபதிகள்

  46.முப்படைகளின் தலைமைத்தளபதி இருப்பவர் யார்?

  குடியரசுத்தவைர்

  47.நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுபவர் யார்? குடியரசுத்தவைர்

  48.பணமசோதா யாருடைய ஒப்புதல் பெற்ற பிறகே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும்?

  குடியரசுத்தலைவர்

  49.குடியரசுத்தவைருக்குள்ள நீதித்துறை அதிகாரம் என்ன?

குற்றவாளிகளின் தண்டனைகளை கூட்டவோ குறைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ அதிகாரம் உண்டு.மரண தண்டணையைக்கூட இவர் தள்ளுபடி செய்யலாம்

50.குடியரசுத்தலைவருக்குள்ள நிதித்துறை அதிகாரங்கள் யாவை?

நாட்டின் நிதிக்கு குடியரசுத்தலைவரே முழுப்பொறுப்பு ஆவார்.இவரது பரிந்துரை இல்லாமல் எந்த ஒரு நிதி மசோதாவும் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தமுடியாது.ஆண்டு வரவு செலவு கணக்கு இவரது அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் மத்திய நிதி அமைச்சரால் தாக்கல் செய்யப்படுகிறது.

ஏதிர்பாராச்செலவு நிதியிலிருந்து செலவழிக்கும் உரிமையை குடியரசுத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

51.குடியரசுத்தலைவர் அறிவிக்கும் மூன்று விதமான நெருக்கடி நிலை அதிகாரங்கள் யாவை?

1. தேசிய நெருக்கடி நிலை(ஷரத்து 352) 2.மாநில நெருக்கடி நிலை(ஷரத்து 356) 3.நிதி நெருக்கடிநிலைப்பிரகடனம்(ஷரத்து 360)

52.தேசிய நெருக்கடி நிலை எப்போது அறிவிக்கப்படுகிறது.

அ.இந்திய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்,போர்,அயல் நாட்டுப்படையெடுப்பு மற்றும ராணுவக்கிளர்ச்சி ஏற்படும்போதும்

53.மாநில நெருக்கடி நிலை எப்போது கொண்டுவரப்படுகிறது?

ஒரு மாநிலத்தில் ,மாநில அரசு அரசியலமைப்பு சட்டத்தை மீறி செயல்படும்போது

54.மாநில அரசியலமைப்பு அவசரநிலைப்பிரகடத்தின்போது மாநில நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வது யார்?

குடியரசுத்தவைர்

55.நிதிநிலை அவசரநிலைப்பிரகடனத்தை இந்தியாவின் எப்பகுதியில் அறிவிக்கலாம்?

இந்தியாவின் முழுமைக்குமாகவோ அல்லது குறிப்பிட்ட பகுதிக்குமாகவோ

56.குடியரசுத்துணைத்தலைவர் பதவி பற்றிக் கூறும் அரசியலமைப்பு பிரிவு எது?

ஷரத்து 63

57.குடியரசுத்துணைத்தலைவரின் பணி என்ன?

குடியரசுத்தலைவர் உடல்நலக்குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாதபோதும் அல்லது நாட்டில் இல்லாதபோதும்,குடியரசுத்தலைவர் பதவி விலகும்போதும்,இறப்பு அல்லது குற்றச்சாட்டு மூலம் பதவி காலியாகும்போதும் அவரது பணிகளை மேற்கொள்வார்.

58.குடியரசுத்துணைத்தலைவருக்கான தகுதிகள் யாவை?

குடியரசுத்தலைவராவதற்குரிய தகுதிகள் அனைத்தும்

59.குடியரசுத்துணைத்தலைவரின் பதவிக்காலம்- 5ஆண்டுகள்

60.குடியரசுத்துணைத்தலைவர் எவ்வளவு காலத்திற்கு குடியரசுத்தலைவர் பணிகளை மேற்கொள்ளலாம்?

அதிகபட்சம் ஆறுமாத காலத்திற்கு

61.இந்திய அதிகார படிநிலையில் துணைக்குடியரசுத்தலைவரின் நிலை என்ன?

குடியரசுத்தலைவருக்கு அடுத்து இரண்டாவது இடம்

62.துணைக்குடியரசுத்தலைவருக்கென உள்ள பணிகள் யாவை?

இவருக்கென தனிப்பட்ட பணிகள் வரையறுக்கப்படவில்லை.இவர் ராஜ்ய சபையின் தலைவராக செயல்படுகிறார்.குடியரசுத்தலைவரின் பதவி விலகல்,இறப்பு அல்லது நீக்கம் ஏற்படும்போது புதிய குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை அவரது பணிகளை மேற்கொள்வார்.

63.இந்திய நாட்டு பிரதம மந்திரி எந்நாட்டு பிரதம மந்திரிக்கு ஒப்பானவர்?

இங்கிலாந்து நாட்ட பிரதம மந்திரி

64. யாரை பிரதமராக குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்?

மக்களவையில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சி அல்லது கூட்டணியின் தலைவரை
65.அமைச்சரவையின் தலைவர் யார்? பிரதமர்
66.அமைச்சர்குளுக்கு துறை ஒதுக்கீடு செய்பவர் யார்? பிரதமர்
67.அரசின் நிதிக்குழு,தேசிய ஒற்றுமைக்குழு, திட்டக்குழு தலைவர் யார்?
பிரதமர்
68.அமைச்சர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
அரசியலமைப்புச்சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை.
69.அமைச்சர்களின் மூன்று வகையான தகுதிகள் யாவை?
அ.கேபினட் அல்லது அமைச்சரவை அமைச்சர்கள்
ஆ.ராஜாங்க அமைச்சர்கள்
இ.இணை அமைச்சர்கள்
70.கேபினட் அமைச்சர்கள் என்பவர்கள் யார்?
அரசின் கொள்கைகளை வகுப்பவர்களாகவும் முக்கிய துறைகளுக்கு பொறுப்பு வகிப்பவர்கள்
71.இராஜங்க அமைச்சர்கள் என்பவர்கள் யார்?
சில சிறிய துறைகளுக்கு தனிப்பொறுப்பு வகிப்பவரகள்.இவர்கள் அமைச்சரவை கூட்டத்திற்கு அழைப்பு இருந்தாலொழிய கலந்துகொள்ள இயலாது.
72.இணை அமைச்சர்கள் என்பவர்கள் யார்?
கேபினட் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக இருப்பவர்கள்
73.நமது அரசியலமைப்பு ஏற்படுத்தியுள்ள நீதிமன்ற அமைப்பு என்ன?
உச்சநீதிமன்றத்தினை தலையாய நீதிமன்றமாகக் கொண்ட சுதந்திரமான,ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை
74.ஒருங்கிணைக்கபட்ட நீதித்துறை என்பது என்ன?
நாடு முழுவதுமும் பல அடுக்குளில் உள்ள நீதி மன்றங்கள் அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் செயல்படுவது என்று பொருள்படும்.
75.நீதித்துறையின் முக்கிய பங்கு என்ன?
1. குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது
2.அரசியலமைப்பு விதிகளை விளக்குவதும் நிர்வாக சட்டமன்றத்தலையீடுகளிலிருந்து அரசியலமைப்பு அடிப்படை கட்டமைப்பை பாதுகாப்பது
76.இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது இருந்த நீதிபதிகளின் எண்ணிக்கை?
ஒரு தலைமைநீதிபதி உட்பட் 8 நீதிபதிகள் (பிறகு 25+1)
77.தற்போதுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
30+1
77.உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றநீதிபதிகளை நியமனம் செய்பவர்?
குடியரசுத்தலைவர்
78.உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் தகுதிகள் ?
1.இந்தியக்குடிமகனாக இருத்தல் வேண்டும்
2.உயர்நீதிமன்றங்களில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் நீதிபதியாக பணியாற்றிய அனுபவம் (அல்லது)
3.உயர்நீதிமன்றத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வழக்குரைஞராகப்பணியாற்றிய அனுபவம்
79.உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது என்ன?
65 வயது

80. உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதவி விலக விரும்பினால் தங்களது ராஜினா கடிதத்தை யாரிடம் சமர்பிக்கவேண்டும்?

குடியரசுத்தலைவரிடம்

81.உச்ச நீதிமன்ற நீதிபதிகளை பதவிநீக்கம் செய்யும் வழிமுறை என்ன?

பாராளுமன்ற குற்றச்சாட்டுகள் மூலம்

82.உச்சநீதிமன்றத்தின் அமைவிடம்?

தில்லி

83.உச்சநீதிமன்றத்தின் தலைமை இடத்தை மாற்ற முடியுமா?

இல்லை.ஆனால் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுடன் இந்தியாவின் வேறு எந்த பகுதியிலும் அமர்வுகளை நடத்த முடிவெடுக்கும் அதிகாரம் தலைமை நீதிபதிக்கு உண்டு.

84.இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பாதுகாவலன் எனப்படுவது?

உச்ச நீதிமன்றம்

85.உச்ச நீதிமன்றத்திற்குள்ள அதிகார வரம்பெல்லைகள் யாவை?

1.முதல் விசாரணை அதிகாரம்

2.மேல் முறையீட்டு அதிகாரம்

3.ஆலோசனை நீதிப்பணி அதிகாரம்

86.உச்ச நீதிமன்றத்தின் முதல் விசாரணை அதிகாரத்தில் வருபவை?

மாநில அரசிற்கும் மத்திய அரசிற்கும் இடையே உள்ள சிக்கள்,மாநில அரசிற்கு இடையேயுள்ள சிக்கல்கள்,அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள்

87. அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் நீதிப்பேராணைகள் யாவை?

அ.ஆட்கொணர் நீதிப்பேராணை

ஆ.செயலுறுத்தும் நீதிப்பேராணை

இ.தடைப்பேராணை

ஈ.ஆவணக்கேட்பு நீதிப்பேராணை

உ.தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை

88.நீதிப்பேராணைகளை பிறப்பிக்கம்அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள் யாவை?

உச்ச மற்றும் உயர்நீதி மன்றங்கள்

89.நீதிப்பேராணைகள் பிறப்பிக்கப்படுவதின் நோக்கம் என்ன?

மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்க

90.அரசியலமைப்பின் பாதுகாவலன் என அழைக்கப்படுவது?

உச்ச நீதிமன்றம்

91.ஆட்கொணர் நீதிப்பேராணை என்பது என்ன?

சட்டத்திற்கு புறம்பாக கைது செய்வதிலிருந்து மக்களை பாதுகாப்பது

செயலுறுத்தும் நீதிப்பேராணை: சட்ட உதவி அளித்து பொதுப்பணியின் சேவை கிடைக்கச்செய்கிறது

தடைப்பேராணை : துணை நீதிமன்றங்கள் வரம்பு மீறி செயல்படுவதை தடை செய்கிறது.

ஆவணக்கேட்பு நீதிப்பேராணை: துணை நீதிமன்றங்களின் வரம்பு மீறி வெளியிடும் ஆணைகளை நீக்குதல்

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை : பொதுப்பதவிளை ஆக்கிரமிப்பு செய்வதை தடை செய்தல்

92.உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கெதிராக ஒருவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையா?

ஆம்.உயர்நீதி மன்றத்தின் ஒப்புதல் தேவை.

93.இந்தியாவில் தற்போதுள்ள உயர்நீதிமன்றங்களின் எண்ணிக்கை ?

21 உயர்நீதிமன்றங்கள்

94.எத்தனை மாநிலங்களுக்கு உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது?

ஒரு மாநிலத்திற்கு ஒரு உயர்நீதிமன்றம்.சில உயர்நீதிமன்றங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பொறுப்பு வகிக்கின்றன.

95.லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றங்களின் பணி என்ன?

விரைவாகவும் குறைந்த செலவிலும் நீதி கிடைக்க குறிப்பாக ஏழைமக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள்

96.லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றங்கள் எப்போது ஏற்படுத்தப்பட்டன?

1987 ஆம் ஆண்டு உரிமை பணிச்சட்டத்தின்படி.இவை தேங்கி இருக்கும் வழக்குகளை விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன.

97.விரைவு நீதிமன்றங்கள் என்பவை எவை?

லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றங்கள்

98.குடியரசுத்தலைவருக்கு அரசியலமைப்பு சட்டப்பிரச்சனை தொடர்பாக ஏற்படும் ஐயங்களுக்கு விளக்க அளிக்கும் நீதிமன்றம்?

உச்ச நீதிமன்றம்

99.நீதிப்புணராய்வு அல்லது நீதிமன்ற மறுபரிசீலனை என்பது என்ன?

சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் எந்த ஒரு சட்டத்தையும் அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணானது என்று தீர்பளிக்கும் உச்சநீதிமன்றத்தின் அதிகாரம்

100.எவ்வகை தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் தலையிட முடியாது?

இராணுவத் தீர்ப்பாயங்களில் அறிவிக்கப்பட்ட தீர்ப்புகளில்

101.ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர்நீதிமன்றம் எனக்கூறும் ஷரத்து?

ஷரத்து 214

102.மாநிலத்தின் பிற நீதிமன்றங்கள் எதன் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன?

உயர்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில்

103.உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளை நியமனம் செய்வது யார்?

குடியரசுத்தலைவர் ( சம்மந்தப்பட் மாநில ஆளுநரின் ஆலோசனையின் பேரில்)

104.உயர்நீதிமன்ற மற்ற நீதிபதிகளை நியமனம் செய்வது யார்?

குடியரசுத்தலைவர்(உயர்நீதிமன்ற தலைமைநீதியின் ஆலோசனையின் பேரில்)

105.உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா?

இல்லை

106. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தகுதிகள் யாவை?

அ.இந்தியக்குடிமகனாக இருத்தல் வேண்டும்

ஆ.உயர்நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் அல்லது

இ.குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் ஏதாவதொரு நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிருக்க வேண்டும்

107.உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது என்ன?

62 (1963-15 வது அரசியலமைப்புத்திருத்தம்) இதற்கு முன்னர் 60 வயது

108.அடிப்படை உரிமைகளை பாதுகாக்க உயர்நீதிமன்றம் நீதிப்பேராணைகளை எந்த ஷரத்தின் அடிப்படையில் பிறப்பிக்கலாம்?

ஷரத்து 226

109.உயர்நீதிமன்றங்களின் முதலேற்பு அதிகாரத்தில் வருபவை யாவை?

நிருவாகம்,திருமணம் தொடர்பான வழக்குகள்,கம்பனிச்சட்டம் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு

110.உயர்நீமன்றங்களின் மேல்முறையீட்டு வழக்குகள் எவை?

கீழ்நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படும் சிவல் மற்றும் குற்ற வழக்குகள்,அரசியலமைப்பு சட்ட விதிகளின் விளக்கங்கள் தொடர்பான வழக்குகள்

111.உயர்நீதிமன்றங்களுக்கு கீழ் செயல்படும் நீதிமன்றங்கள் எவை?

சார்பு நீதிமன்றங்கள்

112.நீதிப்புணராய்வு அதிகாரம் உயர்நீதிமன்றங்களுக்கும் உண்டா?

உண்டு

113.சென்னை உயர்நீதிமன்ற கிளை எங்கு செயல்படுகிறது?

மதுரை

114.இந்தியாவில் உள்ள மாநிலங்கள் எத்தனை?

29 மாநிலஎங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்(1 தேசிய தலைநகர் பகுதி உட்பட)

115.யூனியன் பிரதேசங்களை நிர்வகிப்பவர் யார்?

துணைநிலை ஆளுநர்(லெப்டினன்ட் கவர்னர்) மூலம் குடியரசுத்தலைவர்

116.டெல்லி தேசியத்தலைநகர் பகுதி அந்தஸ்தை பெற்றது எந்த சட்டத்திருத்தத்தின் மூலம்?

1991 ம் ஆண்டு 69 வது சட்டத்திருத்தத்தின் மூலம்

117.மாநில அரசின் நிருவாகப்பணிகளைப் பற்றி குறிப்பிடும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?

ஷரத்து 152 முதல் 237 வரை

118.ஆளுநர்களின் நியமனம்,தகுதி,அதிகாரம் மற்றும் பணிகள் பற்றி விளக்கும் அரசியலமைப்பு சட்டப்பிரவுகள் எவை?

ஷரத்து 153 முதல் 160 வரை

119.மாநில நிருவாகம் எதை உள்ளடக்கியது?

ஆளுநர்,முதலமைச்சர்,அமைச்சரவை

120.மாநில நிருவாகத்துறை யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது?

ஆளுநர்

121.உண்மையான நிருவாகத்துறை என்பது எது?

முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையே

122.மாநில அமைச்சரவை யாருக்குப் பொறுப்பானதாகும்?

சட்டப்பேரவைக்கு

123.மாநில ஆளுநரை நியமனம் செய்வது யார்?

குடியரசுத்தலைவர்

124.மாநில ஆளுநரை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றம் செய்யலாமா?

மாற்றம் செய்யலாம்

125.ஆளுநருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பவர் யார்?

மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

126.மாநில ஆளுநருக்கான தகுதிகள் யாவை?

இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்,35 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும்,நாடாளுமன்றத்திலோ சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருந்தால் அப்பதவியை துறக்கவேண்டும்,மத்திய மாநில அரசில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது

127.ஆளுநரின் பதவிக்காலம் எவ்வளவு?

பொதுவாக 5 ஆண்டுகள் ,ஆனால் குடியரசுத்தலைவர் விரும்பும் வரை அவர் பதவியில் தொடரலாம்
128.பதவிக்காலம் முடியும் முன்பே ஆளுநரை பதவிநீக்கம் செய்யும் அதிகாரம் பெற்றவர் யார்?
குடியரசுத்தலைவர்
129.ஆளுநருக்கு முதலமைச்சரை நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கும் அரசியமைப்பு சட்டப்பிரிவு எது? ஷரத்து 164
130.மாநில அமைச்சர்களை நியமனம் செய்வது யார்?
முதலமைச்சரின் ஆலோசனையின் ஆளுநர்
131.ஆளுநரால் நியமனம் பெறுவோர் யார்?
மாநில அரசின் தலைமை வழக்கறிஞர்,மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள்
132.மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைபெறும்போது மாநில நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்பவர் யார்? ஆளுநர்
133.சட்டமன்றத்திற்கு ஆளுநரால் நியமனம் பெறும் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
சட்ட மேலவைக்கு 1/6 பங்கு உறுப்பினர்களையும் சட்டப்பேரவைக்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரையும் நியமனம் செய்கிறார்
134.மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் மசோதா எப்போது சட்டமாகும்?
ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றபிறகு
135.சட்டப்பேரவை நடைபெறாத காலங்களில் அவசர சட்டங்களைப்பிறப்பிப்பவர் யார்?
ஆளுநர் ( இச்சட்டங்கள் 6 வார காலத்திற்குள் மாநில சட்டமன்றத்தின் ஏற்பை பெறவேண்டும்)
136.மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி கொண்டு வரப்பயன்படும் அரசியலமைப்பு ஷரத்து எது?
ஷரத்து 356
137.ஆளுநரின் அனுமதியின்றி சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தமுடியாத மசோதாக்கள் எவை?
நிதி மசோதாக்கள்,மாநில அரசின் ஆண்டு வரவு-செலவுதிட்டம்
138.வரவு செலவுத்திட்டம் என்பது என்ன?
நடப்பு ஆண்டிற்கான அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் குறித்த அறிக்கை
139.ஆளுநர் பெற்றுள்ள நீதி அதிகாரங்கள் யாவை?
மாநில உயரிநீதி மன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளிகளை மன்னிக்கவும் தண்டனையைக் குறைக்கவும் அல்லது நீக்கவும் அதிகாரம் பெற்றவர்( எனினும் தண்டனையை அதிகப்படுத்தும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை)
140.யாரை முதலமைச்சராக ஆளுநர் நியமிக்கிறார்?
சட்டப்பேரவையில் எந்தக்கட்சி அல்லது எந்த அணி பெரும்பான்மை பெற்றுள்ளதோ அந்தக்கட்சி அல்லது அணியின் தலைவரை
141.முதலமைச்சரின் அதிகாரங்கள் யாவை?
அமைச்சரவையை அமைத்தல்,அமைச்சர்களுக்கு துறை ஒதுக்கீடு செய்தல்,கடமை தவறும்போது அமைச்சர்களை பதவி விலகக்கோருதல்,ஆளுநர் அறிவிக்கையின்படி துறைகளை அமைச்சர்களுக்கு மாற்றம் செய்வது,அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமை தாங்குவது,பதவிக்காலம் முடியும் முன்பே சட்டப்பேரவையைக் கலைக்க ஆளுநருக்கு அறிவுறுத்துவது
142.சட்டமன்ற உறுப்பினர்களாய் அல்லாதவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டால் எவ்வளவு காலத்திற்குள் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?
ஆறு மாத காலத்திற்குள்
143.சட்டப்பேரவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினால் அமைச்சரவையின் நிலை என்ன?

அமைச்சரவை பதவி விலக வேண்டும்

144.மாநில அமைச்சரவையின் ஒட்டுமொத்த பொறுப்பு (collective responsibility) எதனுடன் தொடர்புடையது? சட்டப்பேரவை

145.வாக்குரிமை வயது 21 லிருந்து 18 ஆக குறைத்த சட்டத்திருத்தம் எது?

1988-89 ம் ஆண்டு 61 வது அரசியலமைப்பு திருத்தம்

146.ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை எதனடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது?

மக்கள் தொகை அடிப்படையில்

147.ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை எவ்வளவு?

500 ( குறைந்தபட்ச எண்ணிக்கை-60)

148.சட்டப்பேரவை உறுப்பினராக போட்டியிட தகுதியான வயது என்ன?

25 வயது

149.சட்டப்பேரவையின் பதவிக்காலம் எவ்வளவு?

5 ஆண்டுகள்

150.சட்டப்பேரவைக்கு தலைமைதாங்குபவர் ? சபாநாயகர் அல்லது அவைத்தலைவர்

151.சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

சட்டப்பேரவை உறுப்பினர்கள் மூலம்

152.தமிழ்நாட்டின் தற்போதைய சபாநாயகர் யார்? திரு. தனபால்

153.சட்டமேலவையை கலைக்கும் அதிகாரம யாரிடம் உள்ளது?

சட்டப்பேரவையின் பரிந்துரையின் பேரின் பாராளுமன்றம் கலைக்கலாம்

154.சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு? 6 ஆண்டுகள்

155.சட்ட மேலவை உறுப்பினர்களின் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச எண்ணிக்கை எவ்வளவு?

மொத்த மாநில சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் இருக்கக்கூடாது. ஆனால் மொத்த உறுப்பினர்கள் 40 க்கும் குறையாமல் இருக்கவேண்டும்

156.சட்ட மேலவை உறுப்பினராக போட்டியிட தகுதியான வயது என்ன?

30 வயது

157.சட்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை என்ன?

1/3 பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலம்

1/12 பங்கு உறுப்பினர்கள் மாநில பல்கலைக்கழக பட்டதாரிகளால்

1/12 பங்கு உறுப்பினர்கள் ஆசிரியர்களால்

1/3 பங்கு உறுப்பினர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மூலம்

1/6 பங்கு உறுப்பினர்கள் ஆளுநர் நியமனம் மூலம்

158.தமிழ்நாட்டில் சட்ட மேலவை ஒழிக்கப்பட்ட ஆண்டு எது?

1986 நவம்பர் 1 ந்தேதி

159.சட்ட மேலவையை நடத்துபவர் யார்?

மேலவைத்தலைவர்(Chairperson) ,இவர் இல்லாத காலங்களில் மேலவைத்துணைத்தலைவர்

160.புதிய வரிகளை விதிக்க யாருடைய/எதனுடைய அனுமதி தேவை?

சட்டமன்றம்

161.சட்டமன்ற இரு அவைகளில் எந்த அவை அதிக அதிகாரம் உடையது?

சட்டப்பேரவை

162.அரசியலமைப்பில் அடிப்படைக்கடமைகள் எப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன?

பகுதி IV A ,ஷரத்து 51A( 1976- 42வது திருத்தம் மூலம்)

163.அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் அரசியலமைப்பின் எப்பகுதியில் உள்ளது?

பகுதி IV

164.இந்திய அரசியலமைப்பில் நலம் நாடும் அரசு செயல்பட அடிப்படையாக உள்ள பகுதிகள் யாவை?

பகுதி III, பகுதி IV, பகுதி IV A

165.அடிப்படை உரிமைகள் பற்றிய ஷரத்துகள் எவை?

ஷரத்து 12-35

166.அடிப்படை உரிமைகளின் வகைகள் எத்தனை ? அவை யாவை?

1.சமத்துவ உரிமை – பிரிவு14-18

2.சுதந்திர உரிமை – பிரிவு 19-22

3.சுரண்டலுக்கான உரிமை – பிரிவு 23-24

4.சமய சுதந்திர உரிமை – பிரிவு 25-28

5.பண்பாடு மற்றும் கல்வி உரிமை – பிரிவு 29-30

6. அரசியலமைப்பின்படி தீர்வுக்காணும் உரிமை – பிரிவு 31

167.ஷரத்து 15 – சமயம்,சாதி,பால்,இனம் மற்றும் நிறம் அடிப்படையில் எவரையும் வேறுபடுத்தக்கூடாது

ஷரத்து 16 – பொதுப்பணி மற்றும் வேலைவாய்ப்பு நியமனங்களில் சமவாய்ப்பு

ஷரத்து 17- தீண்டாமை ஒழிப்பு(சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்களின் நலன் காத்தல்)

ஷரத்து 18 – அரசு அனுதியின்றி பெறும் இராணுவம் மற்றும் கல்வி தவிர பட்டங்களைத் தடைச் செய்தல்

சுதந்திர உரிமை

168. ஷரத்து 19 ல் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் யாவை?

பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் உரிமை, ஆயுதமின்றி கூட்டங்களை அமைதியாக நடத்தும் உரிமை,சங்கங்கள் மற்றும் கழகங்கள் ஏற்படுத்தும் உரிமை,இந்தியாவின் எப்பகுதிக்கும் செல்லும் உரிமை,இந்தியாவின் எப்பகுதியிலும் வாழும் உரிமை,ஒருவர் எந்த தொழிலையும் அல்லது பணியையும் மேற்கொள்ளும் உரிமை

169.ஒருவரை தகுந்த காரணமின்றி கைது செய்வதற்கு தடை விதிக்கும் ஷரத்து – ஷரத்து 20

170.தனி மனித வாழ்வு மற்றும் தனிமனித சுதந்திரத்தை உறுதி செய்யும் ஷரத்து - ஷரத்து 21

171.விசாரணையின்றி எவரையும் கைது செய்யக்கூடாது என்று கூறும் ஷரத்து _ ஷரத்து 22

172.கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு மற்றும் மனித வியாபாரத்தை தடை செய்யும் ஷரத்து - ஷரத்து23

173.குழந்தை தொழிலாளர் ஒழிப்பு பற்றிக்கூறும் ஷரத்து - ஷரத்து 24

174.ஷரத்து 25- மதத்தை பின்பற்றி பரப்புவதற்கான சுதந்திரம்

175.ஷரத்து 27- குறிப்பிட்ட சமயத்தின் பராமறிப்பிற்கும் வரி செலுத்துவதற்கும் உரிமை

176.ஷரத்து 28- கல்வி நிறுவனங்களில் சமயப்போதனைளோ அல்லது வழிபாடோ கூடாது

(மத நிறுவனங்களை தவிர)

177.பிரிவு 29 – சிறுபான்மையினர் மொழி ,எழுத்துப்பண்பாட்டை பாதுகாத்தல்

178.பிரிவு 30 – சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிருவவும் நிர்வகிக்கவும் உரிமை

179.பிரிவு 32 – அரசியலமைப்பின்படி குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெறும் உரிமை

180. 6 வயதிலிருந்து 14 வயது வரை இலவசக்கட்டாயக்கல்வி அளிக்க வழிசெய்யும் ஷரத்து

ஷரத்து 21A

181.அரசு நெறிமுறைக்கோட்பாடுகள் அல்லது வழிகாட்டும் கோட்பாடுகள் பற்றிய ஷரத்துகள்

பகுதி IV-ஷரத்து 36 முதல் 51 வரை

182.பிராமணரல்லாத மாணவர்களுக்கான விடுதியை 1912ல் நடத்தியவர் யார்? சி.நடேச முதலியார்

183.நீதிக்கட்சி(தென்னிந்திய நல உரிமைச்சங்கம்) ஏற்படுத்தியர்கள் யார்?
பி.தியாகராய செட்டியார் மற்றும் டாக்டர்.டி.எம்.நாயர்

184.நீதிக்கட்சி ஆட்சியிலிருந்த காலம் என்ன? 1921-37 வரை 16 ஆண்டுகள்

185.வகுப்பு உரிமை ஆணை(இட ஒதுக்கீடு) கொண்டு வந்த கட்சி? நீதிக்கட்சி

186.இந்து அறநிலையத்துறை மசோதா நிறைவேற்றப்பட்டது யாருடைய ஆட்சிக்காலம்? நீதிக்கட்சி

187.தேவதாசி முறை நீக்கப்பட்டது யாருடைய முயற்சியால்? டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி

188.முதன்முறையாக இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய மாநிலம்?
சேன்னை மாகாணம் (நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில்)

189.சாதிமுறையை முற்றிலும் எதிர்த்தவர்கள் யார்?
இராமலிங்க வள்ளலார்,வைகுந்தசாமி

190.வர்ணத்தையும் சாதியையும் மறுத்தவர்கள் யார்?
மகாத்மா பூலே(மகாராஷ்டிரா),கேரளாவில நாராயணகுரு,தமிழ்நாட்டில் அயோத்திதாச பண்டிதர்

191.தமிழ்நாட்டில் அரச வேலைவாய்ப்புகளில் பல்வேறு பிரிவினருக்குக் வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டின் அளவு என்ன?
ஆதிதிராவிடர் 18%,பழங்குடியினர் 1%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 20%,பிற்படுத்தப்பட்டோர் 30%

192. 1924ல் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர் யார்? ஈ.வே.ராமசாமி

193.சேரன்மாதேவியில் குருகுலம் நடத்தியவர் ? வ.வே.சு ஐயர்

194.புரோகிதம் தவிர்த்த சுயமரியாதை திருமணங்களை அறிமுகப்படுத்தியவர்? ஈ.வே.ராமசாமி

195. ஈ.வே.ராமசாமி நடத்திய இதழ்கள் யாவை?
குடியரசு,புரட்சி,விடுதலை போன்ற தமிழ் இதழ்கள் மற்றும் ரிவோல்ட் என்ற ஆங்கில இதழ்

196. ஈ.வே.ராமசாமி க்கு பெரியார் என்ற பட்டம் கிடைக்க காரணமானது எது?
பெண்கள் உரிமைகளுக்காக அவர் நடத்திய போரட்டங்கள்

197.மதிய உணவுத்திட்டம் கொண்டவந்தவர் யார்? காமராசர்

198.சத்துணவுத்திட்டம் கொண்டுவந்தவர் யார்? எம்.ஜி.ஆர்

199.தாழ்த்தப்பட்டவர்களை ஹரிஜன்கள் (கடவுளின் குழந்தைகள்) என்று அழைத்தவர் யார்? மகாத்மா காந்தி

200.பிராமணரல்லாதோர் அர்ச்சராகும் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது? 2006

201.குழந்தை தொழிலாளர் என்பவர் எந்த வயது பிரிவைச் சார்ந்தவர்கள்?
ஆறு வயதிலிருந்து 14 வயது வரை

202.குழந்தை தொழிலுக்கான களங்கள் யாவை?
கம்பளம் நெய்தல்,தீப்பெட்டித்தொழிற்சாலை,பீடி சுற்றுதல், பட்டாசுத்தொழிற்சாலை, உணவு விடுதிகள்,மோட்டார் பழுது பார்த்தல்,கல்லுடைத்தல்,காகிதம் பொறுக்குதல்,வீட்டுவேலை செய்தல்,பிச்சை எடுதத்தல்

203.குழந்தை தொழிலுக்கான காரணங்கள் யாவை?
ஏழ்மை,பெற்றோர்களின் அக்கரையின்மை,பெற்றோரின் குறைந்த வருமானம்

204.குழந்தை தொழிலுக்கெதிரான அரசின் சட்டங்கள் யாவை?
1948 ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் , 1951 ம் ஆண்டு பண்ணைத் தொழில் சட்டம், 1952 ம் ஆண்டு சுரங்கச் சட்டம், 1950 ம் ஆண்டு வணிக கப்பல் சட்டம் , 1961 ம் ஆண்டு மோட்டார்(சீருந்து) போக்குவரத்து தொழிலாளர் சட்டம் ,1938 ம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டம்

205.அமைப்பு சாரா தொழிலாளர் என்போர் யார்?
வேளாண்மைத் தொழிலாளர்கள்,சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள், சூளைத் தொழிலாளர்கள், காடுகளில் பணிபுரிவோர், மீனவர்கள் , பீடி சுருட்டுபவர்கள்,துணி நெய்வோர் ,கட்டிட வேலைசெய்வோர்

206.அமைப்பு சாராதொழிலாளர்களில் வறுமைகோட்டிற்கு கீழ் வசிப்போரின் சதவீதம்?
39.7 %

207.இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனைகள் யாவை?
தகுந்த ஊதியமில்லை, உயிருக்கு பாதுகாப்பு இல்லை,பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பிற்கு வாய்ப்பில்லை, பெரும்பாலும் கொத்தடிமைகளாக உள்ளனர்

208.திருநங்கையர்(Transgender) என்ற குறியீட்டுச் சொல் வழக்கில் வந்த ஆண்டு ? 1970ம் ஆண்டுகளில்

209.திருநங்கையரை மூன்றாவது பால் பிரிவினராக ஏற்றுக் கொண்ட மாநிலம் எது?
தமிழ்நாடு

210.மாநில சமுக இடஒதுக்கீடு கொள்கையில்,அடிப்படை உரிமையில் முதல் சட்டத்திருத்தத்தை கொண்டு வந்தவர் யார்? நேரு

**10ம் வகுப்பு**

1.பஞ்ச சீலக்கொள்கையை வெளியிட்டவர் : நேரு

2.இந்தோனிஷயா எந்த நாட்டிலிருந்து விடுதலை பெற்றது- ஹாலந்து

3.இந்தியா கீழ்க்கண்ட எதில் உறுப்பினராக உள்ளது? நேட்டோ,சீட்டோ,சென்ட்டோ,பாக்தாத் ஒப்பந்தம் மற்றும் வார்சா ஒப்பந்தம்
மேற்கண்ட எதிலும் இந்தியா உறுப்பினர் இல்லை

4.இன ஒதுக்கல் நிலவிய நாடு – தென் ஆப்ரிக்கா

5.இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்து போராடியவர்- நெல்சன் மண்டேலா

6.இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்த ஆண்டு – 1990

7.1994 ம் தென்னாப்பிரிக்க குடியரசுத்தலைவர் ஆனவர் யார்? நெல்சன் மண்டேலா(26 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்)

8.தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் முதல் கூட்டம் நடைபெற்ற இடம் மற்றும் நாள்?
டிசம்பர்7,1985- டாக்கா(வங்காளதேசம்)

9.சார்க் அமைப்பின் முதல் பொதுச்செயலாளர் யார்? ஆஷான் ( வங்களாதேசம்)

10.சார்க் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் யாவை?
வங்காளதேசம்,பூடான்,இந்தியா,மாலத்தீவு,நேபாளம்,பாகிஸ்தான்.இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான்

11.சார்க் அமைப்பின் 16வது மாநாடு நடைப்பெற்ற இடம் மற்றும் நாள் எது?
பூடான் தலைநகர் திம்பு - 2010 ஏப்ரல் 28 மற்றும் 29

12.சமீபத்தில் லாகூர்-டெல்லி பேருந்து போக்குவரத்து தொடங்கப்பட்டது:
மார்ச் 16,1999

13.1949 ல் குடியரசான நாடு எது?
சீனா(இதற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது)

14.இலங்கை எந்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு :புத்த மதம்

15.பாகிஸ்தானிடமிருந்து வங்காளதேசம் பிரிந்து தனிநாடாகியது? 1971

16.பராக்கா அணை ஒப்பந்தம் 1972ல் எந்த இரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்டது?
இந்தியா மற்றம் பங்காளதேசம்

17.சூயஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டது? 1956 தேசியமயமாக்கியவர் எகிப்து அரசர் அப்துல் நாசர்

18. காங்கோவிற்கு அமைதிப்படை யார் தலைமையில் அனுப்பப்பட்டது?

1960ல் கே.என்.ராஜா தலைமையில்

19. சைப்ரஸ் பிரச்சனை தீர்ப்பதற்கு அனுப்பபட்ட படைக்கு தலைமைதாங்கியவர் : இந்திய படைத்தளபதி திம்மையா

20. அணு ஆயுத தடைச்சட்டம் கையெழுத்தான ஆண்டு : 1963

21. அணு ஆயுத குறைப்பு தீர்மானத்தை ஐ.நா பொது சபையில் இந்தியா கொண்டு வந்த ஆண்டு : 1956

22. மக்களாட்சி என்ற சொல் யாரால் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது? ஹேரோடொட்டஸ்

23. ஆங்கிலத்தில் உள்ள Democracy என்ற சொல் எந்த மொழியிலிந்து பெறப்பட்டது?

Demos (மக்கள்) மற்றும் Cratia(அதிகாரம் ஆட்சி) என்ற கிரேக்க சொற்களிலிருந்து

24. மக்களாட்சி பற்றி ஷீலே கருத்து என்ன?

ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க முறையாகும். அதில் அனைத்து மக்களும் பங்குபெறுகின்றனர்.

25. மக்களாட்சியின் வகைகள் யாவை? நேரடி மற்றும் மறைமுக மக்களாட்சி

26. தற்கால உலகில் சிறந்த அரசாங்க முறை எது? ஜனநாயக முறை

27. மக்களாட்சியின் நன்மைகள் யாவை?

மக்கள் உரிமைக்கு பாதுகாப்பு,சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது,மக்கள் கல்வி அறிவு பெறுதல்,நாட்டு நலன் மேம்படுதல்,அமைதியான முறையில் அரசாங்க மாற்றம்

28. மக்களாட்சியின் தீமைகள் யாவை?

ஒழுங்கற்ற அரசாங்கம் அமைய வாய்ப்பு,தகுதிக்கு முக்கியத்துவம் இல்லை,பிரதிநிதிகள் அறியாமைமிக்கவர்கள்,தகுதியற்றவர்கள் மற்றும் அனுபவமற்றவர்கள் ,அதிக செலவினைக்கொண்ட அரசாங்கம், தனிநபர் மற்றும் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் இல்லை

29. ஜனநாயகத்திற்கு அடிப்படையாகத்திகழும் கொள்கை எது?

சுதந்திரம்,சமத்துவம் மற்றும் சகோதரத்துவம்

30. அரசியல் கட்சிகளின் பணிகள் யாவை?

பொதுக்கொள்கை உருவாக்குதல்,தேர்தலில் போட்டியிடுதல்,அரசாங்கத்தை நடத்துவது மற்றும் விமர்சிப்பது ,மக்களை ஒன்று திரட்டுவது

31. கட்சி முறையின் வகைகள் யாவை? ஒரு கட்சி முறை ,இரு கட்சி முறை (ம) பலகட்சி முறை

32. ஒரு கட்சி முறையின் நிறைகள் யாவை?

முடிவுகள் விரைவில் எடுக்கப்பட வாய்ப்பு,சிக்கன செலவு,நாட்டின் பெருமையை பெருமளவி உயர்த்துகிறது

33. ஒரு கட்சிமுறையின் குறைகள் யாவை?

உரிமைகள் மறுக்கப்படுகின்றன,ஏதேச்சதிகாரம் மற்றும் சர்வாதிகாரமுறை தோன்ற வழிவகுக்கிறது

34. இரு கட்சிமுறையின் நிறைகள் யாவை?

மக்களுக்கு ஆளும் கட்சியை தேர்ந்தெடுப்பது எளிது,எதிர்க்கட்சி ஆளும்கட்சியை விழிப்போடு செயல்பட வைக்கிறது.

35. பல கட்சிமுறையின் நன்மைகள் யாவை?

பல கட்சிகள் இருப்பதால்,ஆட்சியைப்பிடிக்கும் ஆர்வத்தில் நல்ல திட்டங்களை செயல்படுத்த முடியும்

36. பலகட்சிமுறையின் குறைகள் யாவை?

ஊழல் ,பிராந்திய உணர்வு,ஒருசார்புடைமை,அரசின் நிலைத்தன்மைக்கு ஊறு

37. தேசிய கட்சிகள் என்பவை எவை?

நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குளில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீத வாக்குளை பெறும் கட்சிகள். (உ.ம்: காங்கிரஸ் மற்றம் பா.ஜ.க)

38.மாநிலக்கட்சிகள் என்பவை எவை?

மாநில சட்டசபைத்தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6 சதவீத வாக்குகளைப்பெற்று குறைந்த பட்சம் இரண்டு இடங்களைப் பெறும் கட்சிகள் -மாநிலக்கட்சிகள் அல்லது பிராந்தியக்கட்சிகள்(உ.ம் தி.மு.க,அ.தி.மு.க மற்றும் தெலுங்கு தேசம்)

39. சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை ? நேரடித்தேர்தல் முறை

40.மறைமுகத்தேர்தல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் யார்?

நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள் , குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத்துணைத்தலைவர்

41.இடைத்தேர்தல் என்பது என்ன?

சில சமயங்களில் ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் மரணமடையலாம் அல்லது பதவியை விட்டு விலகலாம்.அத்தகைய சூழல்களில் அந்த தொகுதியில் மட்டும் நடைபெறும் தேர்தல்கள்

42.இடைப்பருவத் தேர்தல் என்பது என்ன?

சில சமயங்களில் நாடாளுமன்றமோ அல்லது மாநில சட்டசபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் முடியாது இடையில் கலைக்கப்பட்டு நடத்தப்படும் தேர்தல்கள்

43.எதிர்கட்சியாக செயல்படும் கட்சி எது?

லோக்சபாவில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக அதிகபடியான இடங்களைப்பெறும் கட்சி

44.இந்தியா எவ்வகை அரசாட்சியை பெற்றுள்ளது?

பாராளுமன்ற ஜனநாயக முறை

45.இந்திய தேர்தல் ஆணையம் எவ்வாறு அழைக்கப்படுகிறது? நிர்வாசன் சதன்

46. இந்திய தேர்தல் ஆணையத்தில் உள்ள உறுப்பினர்கள் எத்தனைபேர்?

ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் மற்ற இரு ஆணையர்கள்(இவர்கள் குடியரசுத்தலைவரால் நிறமிக்கப்படுகிறார்கள், இவர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள்)

47. இந்திய தேர்தல் ஆணையர்களின் அந்தஸ்து யாருக்கு ஒப்பானது?

உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு ஒப்பானதாகும்

48.மாநில தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது யார்?

தலைமைத் தேர்தல் அதிகார்

49.தமிழகத்தின் தலைமைத்தேர்தல் அதிகாரி யார்? பிரவீன்குமார்

50.தேர்தல் ஆணையத்தின் பணிகள் யாவை?

அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்,தேர்தல் சின்னங்களை ஒதுக்குதல்,வாக்களிக்கும் தேதி மற்றும் வாக்கு எண்ணப்படும் தேதி அறிவித்தல் மற்றும தேர்தல் முடிவுகளை அறிவித்தல்

51.எதிர்கட்சி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து

காபினட் அமைச்சர்

52.இந்தியாவின் பழமையான சமயம் - வேத சமயம்

53.இந்தியாவில் கிறித்துவ மதம் யாரால் கொண்டுவரப்பட்டது- யேசுவின் சீடர் செயிண்ட் தாமஸ் (கி.பி முதல் நூற்றாண்டில்)

54.இந்தியாவின் மாபெரும் இதிகாசங்கள் யாவை?

இராமாயணம் மற்றும் மகாபாரதம்

55.இந்துக்களின் புனித நூல் எது? பகவத் கீதை

56.சீறாப்புராணம் எதைப்பற்றிய நூல் ?

முகமது நபியின் வாழ்க்கையைப்பற்றியது.இந்நூலை இயற்றியவர் : உமறுப்புலவர்

57. வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி எந்த மதத்துடன் தொடர்புடையது?
கிறித்துவ மதம்
58. இந்தியாவின் புகழ்பெற்ற நடனக்கலைகள் யாவை?
பரதநாட்டியம்,குச்சிப்புடி,கதகளி,மணிப்புரி மற்றும் ஒடிசி
59. ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டில் வளர்ப்பதில் பெரும்பங்கு வளர்ப்பவை ?
நடனம் மற்றும் இசைக்கலை

-----

60. தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நாள் எது
2005 அக்டோபர் 12
61. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1986
62. நுகர்வோர் மன்றங்கள் எத்தனை அடுக்குகள் கொண்டது?
3 அடுக்கு – தேசிய அளவில் தேசிய நுகர்வோர் கழகம்(டெல்லி) ,மாநில அளவில் மாநில நுகர்வோர் கழகம், மாவட்ட அளவில் மாவட்ட அமைப்பு
63. இந்தியாவில் தரத்தை குறிக்கும் குறியீடுகள் யாவை?
இந்தியத் தரக்குழுமம் குறியீடு(BIS) மற்றும அக்மார்க் குறியீடு ( விவசாயம் சார்ந்த பொருள்கள் மீது)
64. உலகத் தர அமைப்பு(ISO) எப்போது ஏற்படுத்தப்பட்டது? 1947 ல் ஜெனீவா

65. 1963ல் FAO மற்றும் WHO ஆகியவற்றை நிறுவிய அமைப்பு எது?
BISCodex Alimentation Commission(CAC)
66. இந்திய தேசிய நுகர்வோர் தினம் அனுசரிக்கப்படும் நாள் : டிசம்பர் 24
67. உலக நுகர்வோர் தினம் கொண்டாடப்படும் நாள் : மார்ச் 15
68. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை எனப்படுபவர் : ரால்ஃப் நடால்
69. COPRA என்பது என்ன ? நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்
70. அமெரிக்காவில் உள்ள நுகர்வோர் சட்டங்கள்/அமைப்புகள் யாவை?
கூட்டமைப்பு நியாய கடன் வசூல் சட்டம்(The Federal Fair Debt collection Practices Act)
நியாய கடன் அறிக்கை சட்டம்(Fair Credit Reporting Act)
உண்மை கடனளிப்புச் சட்டம்(Truth in Lending Act)
71. நுகர்வோரின் மகாசாசனம் எனப்படுவது : நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்
72. நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள்
வர்த்தக கண்காட்சி,நுகர்வோர் விழா,சுய உதவிக்குழுக்களுக்கும் பஞ்சாயத்துக்குழுக்களுக்கும் நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி கொடுத்தல் etc.

*************